

சென்னை கிழக்கு மாவட்டம்,வார்டு 78 முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். இரவிச்சந்திரன் 2019–2020 ஆம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் 78வது வார்டு மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டடத்தை மாவட்டச் செயலாளர்,இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்,பெருநகர வளர்ச்சி குழும தலைவர் பி.கே. சேகர்பாபு திறந்து வைத்தார்.நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர்,மண்டல குழு தலைவர் சொ.வேலு தலைமை வகித்தார். உடன் மேயர் பிரியா ராஜன்,அவைத் தலைவர் கோ. ஏகப்பன்,கே.எஸ். ரவிச்சந்திரன்,சரிதா மகேஷ் குமார் எம்.சி,மண்டல அலுவலர் ஏ.எஸ். முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் கன மழைக்கு வாய்ப்பு!

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!

சென்னை,செப்.29-

இன்று தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை முதல் அக்டோபர் 4 ஆம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 2526 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட நாட்களில் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என மீனவர்களை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி காமராஜர் நகர் பகுதியில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 3 கோடி 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக 16 கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான பணிகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சாமு நாசர் பள்ளி கட்டுமான பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு வழங்கி பார்வையிட்டார். அருகில் ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்பகராஜ், மாநகராட்சி பொறியாளர் ரவிச்சந்திரன் பகுதி கழக செயலாளர் ஜி .நாராயண பிரசாந்த், ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய நகர செயலாளர்கள் ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த் உள்பட மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் மாநகராட்சி அதிகாரிகள் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளனர்

### புலவர் சொ.பகீரத நாச்சியப்பன் எழுதிய குறளின் பொருள் நூல் வெளியீட்டு விழா!

# திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை. செப். 29-

சிவகங்கை தமிழ் சங்கத்தின் சார்பில் நல்லாசிரியர் புலவர் சொ. பகீரத நாச்சியப்பன் எழுதிய குறளின் பொருள் நூல் வெளியீட்டு விழா சிவகங்கை தமிழ் சங்கத் தலைவர் நல்லாசிரியர் செ.கண்ணப்பன் தலைமையில். ப. மாணிக்கம் தாகூர் எம்.பி. முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்ச்சங்கம் நிறுவனத் தலைவர் ஜவகர்கிருஷ்ணன் வரவேற்றுப் பேசினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ராஜசேகரன், எஸ். குணசேகரன், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம். துரை ஆனந்த்,சேவாசமாஜ செயலாளர் இரா.கோட்டை குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

நிகழ்ச்சியில் குறளின் பொருள் நூலினை வெளியிட்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

திருக்குறளில் இல்லாதது வேறு எந்த நூலிலும் இல்லை. வாழ்க்கை நெறிமுறைகளை நாம் வாழும் வகைகளை அழகாக திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ளார். அனைத்து மதத்தினரும் அனைத்து ஜாதியினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ள ஒரே நூல் திருக்குறள் ஆகும். திருக்குறளுக்கு நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, பரிமேலழகர், வரதராசனார், வ.உ.சி. ஆகியோர் பல்வேறு பொருளில் உரைகள் எழுதியுள்ளனர். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய குறளில் பொருள் பாராட்டுக்குரியதுஆகும். தலைவர் கலைஞர் எழுதிய குறளோவியம் அனைவரின் பாராட்டினை பெற்றது.

பொதுமறையான திருக்குறளை உலகம் முழுவதும் இன்று ஒலிக்கச் செய்ததில் கலைஞரின் பங்கு பாராட்டுக் குரியது. திருக்குறளை உலகம் முழுவதும் அறியும் வகையில் பணியாற்றிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞருக்கே உரியதாகும். திருக்குறளுக்கு பொருள் எழுதிய பட்டியலில் புலவர் பகீரதநாச்சியப்பனும் இடம் பெறுகிறார் என்பது மகிழ்ச்சியான செய்தி ஆகும். இஸ்லாமியர்களுக்கு குரான் கிறிஸ்துவர்களுக்கு பைபிள், இருப்பது போல் நமக்கு திருக்குறள் என்பது தான் பொதுமறை ஆகும். பொது நூலாகும். பல்வேறு மதத்தினர் திருக்குறளை படித்து அதன் பெருமையை உணர்ந்துள்ளார்கள். திருக்குறளுக்கு பேருந்தில் அனைத்து மக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் குறளை எழுதி,அதற்கு பொருளையும் எழுதி பாராட்டு பெற்றவர் கலைஞர் ஆவார். திருவள்ளுவருக்கு உருவம் கொடுத்தவரே தலைவர் கலைஞர் அவர்கள் தான். திருவள்ளுவரின் பெருமையை உலகறியச் செய்திடும் வகையில் சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார். குமரியில் 133 அடி உயரத்தில் வள்ளுவர் சிலையினை அமைத்து பெருமை சேர்த்தார்.

தமிழுக்கும் தமிழ் மொழிக்கும் பெருமை சேர்த்த தலைவர்களில் தலைவர் கலைஞர் முதலிடம் பெற்று சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளார்.உலக மொழிகளில் பல மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.தலைவர் கலைஞர் வழியில் நம்முடைய தமிழக முதல்வர் தளபதி அவர்களும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வருகிறார். பல்வேறு பணிகளையும் செய்து வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன். நகர்மன்ற துணைத்தலைவர் எம். கார்கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன் திருமலை முத்துராமலிங்கம், கே.எஸ். ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, சுரேஷ்குமார், சேவா சமாஜ பொருளாளர் தங்கமணி, ஏ.ஆர். பி. முருகேசன், முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் ப.சத்திய மூர்த்தி ராஜரத்தினம்,உயர் நீதிமன்ற வழக்கறிஞர் அ.தேவராஜ்மானா மதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியினை சி.குமார், திருமதி சுமித்ரா ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள், உயர்நீதிமன்ற வழக்கறிஞர். இ.எம்.எஸ். ஜெயசிம்மன் நன்றி கூறினார். ஏரியூர் பட்டதாரி அறிவுச்செல்வம் வாழ்த்துப்பா வாசித்தார். கவிஞர் ஜெயம்கொண்டான் திருக்குறள் குறித்து விளக்கிப் பேசினார்.

### எங்கள் தலைவர்; எங்கள் கட்சி; எங்கள் கொடி; எங்கள் கொள்கை;

# திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் கழக நிர்வாகிகள் இல்லந்தோறும் கழக கொடியேற்றும் விழா!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூரில் தொடங்கி வைத்தார்! வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ பங்கேற்பு!

திருவள்ளூர், செப். 29-

மனித வாழ்வின் முன்னேற்றத்திற்காகவும் இனம் மொழி விடுதலைக்காவும் மாநில உரிமை காக்கவும் பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

கொட்டும் மழையில் சென்னை ராபின்சன் பூங்காவில் தி.மு.கழகத்தின் தொடக்க விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. “திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது. சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மம், அரசியலில் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை ஆகியவை தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள்” என்று அண்ணா முழங்கினார்.

கறுப்பு சிவப்பு எனும் இருவண்ணக் கொடி கழகக் கொடியானது. “கறுப்பு நிறம் என்பது அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்வில் உள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அடையாளமாகும். சிவப்பு நிறம் அம்மூன்று துறையிலும் உள்ள இருண்ட நிலையைப் போக்கி ஒளி நிலையை உண்டாக்க வேண்டும் என்பதைக் காட்டும் குறியீடாகும். இருண்ட நிலையை ஒளிநிலை அழித்துக் கொண்டு வரவேண்டும். இருண்ட வானில் அடியில் தோன்றி எழும்பும் இளம் பரிதி ஒளி போல் என்ற கருத்துடன் கறுப்பு மேலும், சிவப்பு கீழும் வைக்கப்பட்டு” இருவண்ணக் கொடிக்கான அமைக்கப்பட்டது

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு முழுவதும் உள்ள பட்டி தொட்டிகளில் கழகக் கொடியினை ஏற்றி திமுக கழகத்தை வலுப்படுத்தினர்

இந்த நிலையில் மேலும் திமுக கழகத்தை வலுப்படுத்த விதமாக திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி

எங்கள் தலைவர் எங்கள் கட்சி எங்கள் கொடி எங்கள் கொள்கை என்ற தலைப்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் கழக நிர்வாகிகள் இல்லந்தோறும் கழக கொடியேற்றும் நிகழ்ச்சி மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் நகர திமுக சார்பில் திருவள்ளூர் நகரத்தில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ வி.ஜி. ராஜேந்திரன் எம்.எல்.ஏ நேரடியாக சென்று கழக கொடியினை அமைத்து கழக கொடி ஏற்றி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், மாவட்ட துணைச் செயலாளர் உதயமலர் பாண்டியன், பொதுகுழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, ஒன்றிய செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், கே.அரி கிருஷ்ணன், மோ.ரமேஷ், நகர கழக நிர்வாகிகள் தி.ஆ. கமலக்கண்ணன், டி.எம்.ரவி, ராஜேஸ்வரி கைலாசம், எஸ்.டி.பி.சம்பத் ராஜா, இ.குப்பன், டி.என்.ஆர். சீனிவாசன், சிவக்குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கவுன்சிலர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் ம.கிரண், டி.கே.பாபு, ம.புவனேஸ்குமார், ஆர். திலீபன், வேலாயுதம், மதுசூதனம் கு.பிரபாகரன் , கோபால், வசந்தி வேலாயுதம், அய்யூப் அலி, வீனஸ், ராயல்பாஸ்கரன் , டொனால்டோ, மேஸ்திரி விஜயகுமார், கோவி. மனோகரன், நரேஷ் , பஸ்ஸ்டாண்ட் ஜெ.சேகர், ஆ. பவளவண்ணன் , ஜி.பாண்டியன், பாலகிருஷ்ணன், ராஜி, அஸ்லாம், ஜி.எம்.கிஷோர், தனலட்சுமி, காஞ்சிபாடி சரவணன், தொமுச பாஸ்கர், துரை ராஜ், ஜே.சி.பி.கேசவன், உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பில்

# மாமல்லபுரத்தில் உலக சுற்றுலா தின விழா!

மாமல்லபுரம்,செப்.29-

மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பில் உலக சுற்றுலா தின விழா கொண்டாடபட்டது. விழாவில் பரதநாட்டியம், கரகாட்டம், தப்பாட்டம், மயிலாட்டம், பொய்கால்குதிரை என பாரம்பரிய நடனங்கள் நடத்தப்பட்டது. விழாவில் செங்கல்பட்டு சப்கலெக்டர் லட்சுமிபதி, மாமல்லபுரம் சுற்றுலா அலுவலர் சக்திவேல், சிற்பக்கல்லூரி முதல்வர் ராமன், சுர்தீப் ரங்கசாமி, வழிகாட்டிகள் உட்பட 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

முன்னதாக திருக்கழுகுன்றம், கடம்பாடி, தண்டரை, மானாமதி சுற்றுவட்டார பகுதி இருளர் பழங்குடி பெண்கள் தங்கள் வீட்டில் இருந்து உற்பத்தி செய்யும் கை எம்ராய்டரி துணிகளை, அர்ச்சுனன்தபசு அருகே ஸ்டால் அமைத்து காட்சி படுத்தி இருந்தனர். மயில், பழங்குடி வேட்டை, மாம்பழம், மயில், கோலம் உள்ளிட்ட டிசைன்கள் அங்கு வந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்தது. மாமல்லபுரம் அபிராமி யோகாலயாவினர் இவர்களை ஒருங்கிணைத்து இந்த பழங்குடி விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

# எதிர்க்கட்சி எம்.பி.யை ஆபாசமாக பேசிய பா.ஜ.க. எம்.பி.க்கு புதிய பொறுப்பு!

## வெறுப்புணர்வுக்கான வெகுமதி என எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனம்!

புதுடெல்லி, செப். 29-

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.யை ஆபாசமாக பேசிய பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பிதுரிக்கு புதிய பொறுப்பு வழங்கியது, வெறுப் புணர்வுக்கான வெகுமதி என எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரின் போது, பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான ரமேஷ் பிதுரி, பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி. டேனிஷ் அலியை நோக்கி வெறுப்புணர்வை தூண்டும் வகையிலான கருத்தை பேசி இருந்தார். இது, சிறுபான்மையின வெறுப்பு பேச்சு என பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் பிதுரி மீது நடவடிக்கை எடுக்காமல் அவருக்கு பா.ஜ.க. புதிய பொறுப்பு வழங்கியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில் டோங் மாவட்டத்தின் தேர்தல் பொறுப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு, எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

### சென்னை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர்

# ஜி.எம்.தேவன் சகோதரி எம்.நீதிதேவி படத்திறப்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!



சென்னை, செப். 29-

துறைமுகம் தொ.மு.ச. தலைவர் என்.மகாதேவனின் மனைவியும், சென்னை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஜி.எம்.தேவனின் சகோதரியுமான எம்.நீதிதேவி அவர்களின் நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்ச்சி 30.9.2023, சனிக்கிழமை அன்று மாலை 7 மணிக்கு, சென்னை-1, கிளைவ் பேட்டரி, 4-வது கடற்கரை சாலை, கார்ப்பரேஷன் காலனி, இ.பிளாக், எண்.1 இல்லத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஜி.எம். தேவன் தலைமை வகிக்கிறார். நினைவில் வாழும் திருமதி எம்.நீதிதேவி அவர்களின் திருவுருவப்படத்தினை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர் பாபு திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்துகிறார்.

வி.பி.ஜவகர்பாபு, எம்.ஜி.எம். ஆனந்த், க.நடராஜன், வி.சாந்தி, டி.தங்கமணி, என்.நக்கீரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

துறைமுகம் கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.ராஜசேகர், இசட் ஆசாத், கே.கவியரசு ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இதில் எம்.சுகுமார், எஸ். புவனேஷ்வரி, ஜி.மகேந்திரன், எஸ்.யுவஸ்ரீ, எஸ்.ஹேமா, எஸ். பத்திரி நாராயணன், ஜி.மகேந்திரன், டி.சாந்தி உள்பட கழக முன்னணியினர், தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.





கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 3000 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா நான்கு ஊராட்சிகளில் ஒன்றிய செயலாளர் ந.பரிமளம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி. கே.வி.உமாமகேஸ்வரி, தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் சி.எச்.சேகர் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை ஏழை எளிய மக்களுக்கு வழங்கினர். இதில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் உள்பட கழக முன்னணியினர் – நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி

# 40வது வட்டம் ஆர்.அருணகிரி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, செப்.29-

சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி 40-வது வட்ட கழக முன்னோடி மறைந்த ராமசாமி அவர்களின் மகன் ஆர்.அருணகிரி (வயது 78) அவர்கள் நேற்று 28.9.2023, வியாழக்கிழமை காலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் எண். 7/1, கிராஸ் ரோடு, புது வண்ணை, சென்னை-81 என்ற இல்லத்திலிருந்து இன்று பகல் 12 மணியளவில் காசிமேடு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே. முனியசாமி

### செப்டம்பர் 29 (2009)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.